1975 அக்டோபர் 24]

தேனி மருத்துவமனை ஆலோசனைக்குழு

* 31. வினா திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், தேனி அரசினர் மருத்துவ மனையில் அட்வைசரி கமிட்டி மெம்பர்கள் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், யார் யார் என்ற விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) கீழ்வரும் நபர்களை அரசு அரசாணை வாலாய எண் 2906, சுகாதாரம், நாள் 31—12—1974-இல் அரசு சார்பற்ற உறுப் பினர்களாக மூன்று ஆண்டுக் காலத்திற்கு நியமித்துள்ளது.

(1) திரு. வாகுண்டசாமி, பருத்தி வியாபாரி, தேனி.

(2) திரு. எஸ். ராசு, சிவானந்ததேவரின் புதல்வர், கான்வென்ட் தெரு, தேனி.

(3) திரு. எஸ். ராமகிருட்டிண செட்டியார், வியாபாரி.

(4) திருமதி சோணமுத்து, பள்ளர் தெற்குத் தெரு, அல்லி நகரம்.

(5) திரு. வி. கே. சுப்பிரமணியம், காரியதரிசி, பழனி செட்டிபட்டி யூனியன், தேனி.

(6) புலவர் வெங்கடேசன், 36 கி. மு. சாவடி தெரு, அல்லி நகரம்.

Drugs Inspectors.

* 32 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that the Government propose to raise the strength of Drugs Inspectors; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) தற்போது மாநில மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் கீழ் மருந்துப்பொருள் முதுநிலை ஆய்வாளர்கள் 10 பேரும், மருந்துப் பொருள் ஆய்வாளர்கள் 59 பேரும் உள்ளனர். திட்டம் சாரா

பணித்திட்டத்தின் கீழ் புதுப் பதவி எதுவும் ஏற்படுத்துவதற்கு அறவே தடை விதிக்கப்பட்டுள்ளதால், முதுநிலை மருந்துப் பொருள் ஆய்வாளர் ஒருவர் மற்றும் மருந்துப்பொருள் ஆய்வாளர்கள் அறுவர் விடுப்புக்கால பதிலிப் பதவிகள் ஏற்படுத்துவதற்காக மாநில மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற செயற்குறிப்பு ஆறு மாத காலத்திற்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இப்போதே மருந்தில் கலப்படம் அதிகரித்துள்ளது. பழைய மருந்துகளுக்கே புதிய மருந்து லேபிள்களை ஒட்டி விற்பனை செய்கிறார்கள். தஞ்சாவூர் மெடிகல் காலேஜ், சென்னை போன்ற இடங்களில் ஊசி போடப்பட்டதன் காரணமாக சிலர் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தோம். மருந்துகள் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு வருகின்றனவா என்பதைப் பரிசீலிப்பது மிகவும் அவசியம். கோடிக்கணக்கான ஜனங்கள் அவற்றை நம்பி இருக்கிறார்கள். இன்னும் அதிகப்படியான ஆய்வாளர்களைப் போட்டு, தரமற்ற மருந்துகள் மார்க்கெட்டிற்கு வராமல் தடுப்பதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? ட்ரக் இன்ஸ்பெக்டர்களுடைய பதவிகளை அதிகப்படுத்துவதில் என்ன சங்கடம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அண்மைக்காலத்தில் இவர்களது எண்ணிக்கையை அரசு அதிகப்படுத்தியது. முன்பு மருந்துப்பொருள் ஆய்வாளர்கள் 18 பேர்கள் மட்டும் இருந்தார்கள். ஆய்வாளர்கள் 14 பேர், முதுநிலை ஆய்வாளர்கள் 4 பேர் இருந்தார்கள். இப்போது 1971 ஆம் ஆண்டுடன்தான் முதுநிலை ஆய்வாளர்கள் பத்துப் பேர்களும், ஆய்வாளர்கள் 59 பேர்களும், இவர்களைத் தவிர உதவி அதிகாரி என்று ஒருவரும் நியமிக்கப்பட்டார்கள். இப்போது அண்மையில் ஜாயின்ட் டைரெக்டர்—துணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இத் துறையில் அதிகாரிகளின் எண்ணிக்கை உயர்ந்துதான் இருக்கிறது. என்றாலும், ஓய்வு எடுத்துக்கொள்கிறவர்கள்—விடுமுறையில் செல்கிறவர்கள் இடங்களுக்குப் போட லீவ் ரிசர்வ்—பதிலிப் பதவிகள் சில ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இப்போது பொருளாதார நிலை சரியில்லாததால் 6 மாத காலத்திற்குப் பிறகு அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்ற யோசனை இருக்கிறது.

1975 அக்டோபர் 24]

பழைய மருந்துகளை புதிய மருந்துபோல லேபிள் ஒட்டி விற்கிறார்கள் என்று சொன்னார். அவருக்கே ஹோமியோபதி மருத்துவத்தில்தான் அதிக நம்பிக்கை இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அலபதியில் பழைய மருந்து இல்லை—புதிய மருந்தையே கொடுக்கிறபோது கூட அலர்ஜி ஏற்படுமானால் உடனே அதை மாற்ற மருந்துகொடுக்க முடியாது போகிறபோது உயிருக்கே ஆபத்து ஏற்படுகிற நிலைமை அமெரிக்காவில் இருந்து எல்லா நாடுகளிலும் இன்றைக்கு இருக்கிறது. சில மருந்துகள் சில நேரங்களில்—சில நோயாளிகளிடத்தில் திடீர் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பென்சிலினே நான்கு முறைகள் அவருக்குப் போடுகிறபோது ஒன்றும் செய்கிறதில்லை. அதே மருந்து அந்த நோயாளிக்கே ஐந்தாவது முறை கொடுக்கிறபோது திடீர் விளைவை அவரிடத்து ஏற்படுத்திவிடுகிறது என்கிறபோது டெஸ்ட் டோஸ் கூடப் போட்டு கண்டுபிடிக்க முடியாத நிலைமையில்தான் இருக்கிறது. இதுபோல கோடியில் ஒருவர், ஐம்பது லட்சத்தில் ஒருவர் தான் பாதிக்கப்படுகிறார் என்றாலும் இதையும் தவிர்க்க விஞ்ஞானத்தின் மூலம்தான் முயற்சி எடுக்கப்பட்டாக வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: முன்பெல்லாம் உற்பத்தி செய்யப்படுகிற மருந்தின் மேல் உற்பத்தி செய்யப்பட்ட தேதி, அந்த மருந்தின் எக்ஸ்பையரி தேதி ஆகியவற்றைக் குறிப்பார்கள். அதை இப்போது குறிப்பதில்லை. அதைக் கட்டாயம் குறிக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எல்லா மருந்தும் எக்ஸ்பையரி ஆவதில்லை. மனிதர்களுக்குத்தான் எக்ஸ்பையரி உண்டு. சில மருந்துகளை பர்மனெட்டாக நான்கைந்து வருஷம் கூட வைத்துக் கொள்ளலாம். சில குறிப்பிட்ட மருந்துகள்தான் சில குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்படவேண்டும். அதற்குப் பிறகு அதன் சக்தியை இழந்துவிடுகிறது. இதுபோன்ற மருந்துகளின் மேல் உற்பத்தி செய்யப்பட்ட தேதி, எக்ஸ்பையரி தேதி ஆகியவை—மத்திய அரசுச் சட்டத்தின் கீழேயே குறிக்கப்பட்டு வருகிறது. தவறு இருந்தால் அது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: ஏற்கனவே டிரக் இன்ஸ்பெக்டர்களாக இருந்து—கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப் படாது வேலையிழந்தவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் அந்தப் பதவிக்கு ஆள் எடுக்கிறபோது அவர்களுக்கு முதலிடம் கொடுப்பதுபற்றி கவனிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Training for Engineering personnel

*33 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a centre for conducting training courses for new entrants, as well as refresher courses for the engineering personnel; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (ஆ) தலைவரவர்களே, புதிதாக நியமிக்கப்படும் பிரிவு அலுவலர்கள், நேரடியாக நியமிக்கப்படும் உதவிப் பொறியாளர்கள் ஆகிய அனைவருக்கும் பயிற்சி அளிக்கவும், பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி அளிக்கவும் பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படலாம் என நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்த பரிந்துரைகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. ஆனால் தற்போதுள்ள நிதி இடர்ப்பாடு காரணமாக இப்பரிவுரைகளைச் செயல்படுத்துவது ஒத்திப் போடப்பட்டுள்ளது.

[முற்பகல் 9.30]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, அவர்களுக்கு என்ன மாதிரியான டிரெயினிங் கொடுக்கப்படும்? அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக சில டிரெயினிங் கோர்ஸ் வைத்திருந்தார்களே, அதற்கும் இதற்கும் பொருத்தம் உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இவர்களுக்குக் கொடுக்கப் போகிற பயிற்சி அவர்கள் செய்யப் போகிற வேலையை